# PGP Institute of Allied Health Sciences
## HEALTHSHIELD 2026
### Promoting Drug Free Living and Professional Excellance

## Dhinamani 10.08.2026



போதைப்பொருள் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்ற போது எடுத்த படம்.

நாமக்கல் பி.ஜி.பி. இணை மருத்துவ அறிவியல் கல்லூரியில்

# போதைப்பொருள் விழிப்புணர்வு நிகழ்ச்சி

பரமத்தி வேலூர், ஆக.10–

நாமக்கல் பி.ஜி.பி. இணை மருத்துவ அறிவியல் கல்லூரியில் போதைப்பொருள் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

பி.ஜி.பி. கல்வி நிறுவனங்களின் தலைவர் டாக்டர் பழனி.ஜி.பெரியசாமியின், தொலைநோக்கு வழிகாட்டுதலின்படி துணை தலைவர் விசாலாட்சிபெரியசாமியின் ஆலோசனையின் பேரில் நாமக்கல் பி.ஜி.பி. துணை மருத்துவ கல்லூரி சார்பில் "ஹெல்த்ஷீல்ட் –2026 போதைப்பொருள் இல்லா வாழ்க்கை மற்றும் தொழில்முறை சிறப்பை மேம்படுத்துதல்" என்ற தலைப்பில் மாணவர் மேம்பாடு மற்றும் சுகாதார விழிப்புணர்வு நிகழ்ச்சி கல்லூரி கருத்தரங்க அரங்கில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு பி.ஜி.பி. கல்வி நிறுவனங்களின் தாளாளர் கணபதி தலைமை வகித்தார். கல்லூரியின் முதல்வர் டாக்டர் நாகசிந்துஜா வரவேற்றார். கல்வி நிறுவனங்களின் டீன் டாக்டர் பெரியசாமி சிறப்புரையாற்றி ஒழுக்கம், தொழில்முறை நெறிமுறைகள் மற்றும் முழுமையான ஆளுமை வளர்ச்சியின் அவசியம் குறித்து அறிவித்தார்.

அப்பல்லோ குழும மருத்துவமனைகள் மனிதவளத் துறை அதிகாரி ஸ்ரீராம்சிறப்புவிருந்தினராக கலந்து கொண்டு, "போதைப்பொருள் இல்லா தமிழகத்தை உருவாக்குவதில் ஆளுமை வளர்ச்சி மற்றும் தொழில்முறை சிறப்பின் பங்கு" என்ற தலைப்பில் மாணவர்களிடம் உரையாற்றினார். போதைப்பொருள் பழக்கத்திலிருந்து விலகி, ஆரோக்கியமான வாழ்க்கை முறையையும், சிறந்த தொழில்முறை திறன்களையும் வளர்த்து கொள்ளுமாறு மாணவர்களை அவர் கேட்டுக்கொண்டார்.

நிகழ்ச்சியில் மாணவர்கள் போதைப்பொருள் பயன்பாட்டின் தீமைகளை எடுத்துரைக்கும் விழிப்புணர்வு ஊமை நாடக நிகழ்ச்சியை நடத்தினர்.

அதனை தொடர்ந்து ஓவிய போட்டி, ஆய்வுக்கட்டுரை போட்டி மற்றும் சுவரொட்டி போட்டிகள் நடத்தப்பட்டன.

இதில் மாணவர்கள் பங்கேற்று தங்களது படைப்பாற்றல் மற்றும் பொது சுகாதார விழிப்புணர்வை வெளிப்படுத்தினர்.

நிகழ்ச்சியில் மாணவர்கள், பேராசிரியர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் முடிவில் விரிவுரையாளர் டெய்சி நன்றி கூறினார்.